**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.520/2019**

**தேதி : 17.12.2024**

**(வா.சா.1) – திருமதி. கலாராணி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : (4–ம் பிரதிவாதி தரப்பில்)**

என் தகப்பனார் பெயர் ராமசாமி. எனது சித்தப்பா பெயர் காளியப்பகவுண்டர் என்றால் சரிதான். எனது சித்தப்பாவின் மகள் தான் 4–ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1–ல் பிராதில் சொல்லியிருக்கிற 2–வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து எதுவும் துலக்கப்படவில்லை என்றால் சரிதான். 2–வது அயிட்டச் சொத்துக்கு நான் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2–வது அயிட்டச் சொத்து எனக்கு பாத்தியம் என பரிகாரம் கோரியுள்ளதாகச் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும், எனது சித்தப்பா காளியப்பகவுண்டருக்கும் ஊர்கட்டில் பேசி ஆளுக்கு ஒரு வீடு கொடுத்ததாகச் சொன்னால் ஒரு வீடு எனது தகப்பனாருக்கு கொடுத்தார்கள். காளியப்பகவுண்டருக்கு வீடு எதுவும் கொடுக்கவில்லை. நான் சொல்வது பொய் என்றும், காளியப்பகவுண்டருக்கும் ஒரு வீடு கொடுத்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 2–வது அயிட்ட சொத்து காளியப்பகவுண்டருக்கு கொடுக்கப்பட்டது என்றும், அதில் நான் பங்கு எதுவும் கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல.

எனது தகப்பனாருக்கு கொடுத்த வீட்டை 28.03.2002 அன்று பாப்பாத்தி என்ற கருப்பாத்தாள் என்பவருக்கு நானும், எனது தாயாரும் சேர்ந்து கிரையம் கொடுத்ததாகச் சொன்னால் சரிதான். 4–ம் பிரதிவாதி,

காளியப்பகவுண்டரின் மகள் என்றால் சரிதான். காளியப்பகவுண்டர் 2–வது அயிட்ட சொத்தை புறம்போக்காக இருந்து அனுபவித்து வந்ததால் காளியப்பகவுண்டருக்கு மனைவரி தோராயப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காளியப்பகவுண்டர் பெயரில் பட்டா எண்.1442 என வருவாய்த்துறையில் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பட்டாவை வைத்து கடந்த 08.05.2017 அன்று காளியப்பகவுண்டர் 2–வது அயிட்ட சொத்து சம்மந்தமாக ஒரு பதிந்த உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதிவைத்த பிறகு அந்த சொத்தை 4–ம் பிரதிவாதியும், அவரது தாயாரும் அவர்களது சொந்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக மேற்படி உயில் எழுதப்பட்டது என்றும், உயில் எழுதிய நபர் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் செல்லாது என்பதற்கு எவ்வித பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் சரிதான். 2–வது அயிட்ட சொத்தில் உள்ள வீடு 4–ம் பிரதிவாதியும், அவரது தாயாரும் தற்போது வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். உயில் எழுதிவைத்த காளியப்பகவுண்டர் 28.03.2018 அன்று காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயில் காளியப்பகவுண்டர் காலமான பிறகு தற்சமயம் 4–ம் பிரதிவாதியும், அவரது தாயார் ரெங்கநாயகியும் அதில் வசித்து வருகிறார்கள் என்றும், நான் எந்த காலத்திலும் வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

தாவா 2–வது அயிட்ட சொத்தைப் பொறுத்து நான் எந்தவித பரிகாரமும் 4–ம் பிரதிவாதியிடம் கோர முடியாது என்றால் சரியல்ல. 2–வது அயிட்ட சொத்து வருவாய்த்துறையில் காளியப்பகவுண்டர் மீது பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், அதற்கு ஆட்சேபித்து வருவாய்த்துறையில் நடவடிக்கை

எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். மற்ற சொத்துக்களைப் பொறுத்து 4–ம் பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை என்றும், 2–வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து மட்டும் 4–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் தவறு என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், 4–ம் பிரதிவாதியைப் பொறுத்து வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.12.17 18:01:20 +0530